சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 03.06.2019

# அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரிவருடம் வைகாசி மாதம் 20–ம் நாள் (ஜீன் திங்கள் 03–ம் நாள்:–03.06.2019) திங்கள் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுறுத்தலின்படி சின்னமனூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–இன் கீழ் 2019–ஆம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டங்கள் மற்றும் கொள்கையினை (Solid Waste Management Action Plan & Policy) தயார் செய்து அதில் கொள்கையினை (Policy) மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **திடக்கழிவு மேலாண்மை செயல்திட்டம் மற்றும் கொள்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.6430.2018/எச்1).**

**தீர்மான எண், நாள் 630 , நாள்.03.06.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் பிரிமியத் தொகை ரூ.28585/– ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1).**

**தீர்மான எண், நாள் 631 , நாள்.03.06.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.03

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 31.08.2016 ஆம் நாளிட்ட ந.க.எண்.21085/ப்பி3/2016 எண் செயல்முறை உத்திரவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு சின்னமனூர் நகராட்சியில் 50 துப்புரவ பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் துப்புரவுப்பணி மேற்கொள்ள 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்படி, அனுமதி காலம் 31.07.2019 உடன் முடிவடைகிறது.

தற்போது, சின்னமனூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 82 ஆகும். நகரின் பரப்பளவு மற்றும் மக்கள் தொகையின் அடிப்படையில் 164 துப்புரவுப் பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு அளவு கோலின்படி தகுதியாகிறது. ஆனால் நாளது தேதியில் பணியிடை மரணமடைந்த, வயது முதிர்வின் காரணமாக ஒய்வு பெற்ற மற்றும் மாறுதலில் சென்ற துப்புரவுப் பணியாளர்கள் நீங்கலாக தற்பொழுது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 59 ஆகும்.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 22.11.2018 ஆம் நாளிட்ட ந.க.எண்.28369/ஜே3/2018 எண் செயல்முறையில் 49 துப்புரவ பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் துப்புரவுபணி மேற்கொள்ளஅனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணியாளர்கள் நீஙகலாக தற்போது, 164-(49+59) =56 துப்புரவு பணியிடஙகள் காலியாக உள்ளதால், மேற்படி பணியாளர்களைக் கொண்டு விரிவடைந்து கொண்டே செல்லும் நகர்ப் பகுதிகளை துப்புரவுப் பணி செய்வது மிகவும் சிரமமாக உள்ளதை கருத்தில் கொண்டு, தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மேலும், மூன்று ஆண்டுகளுக்கு துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.0576/2015/எச்1).**

**தீர்மான எண், நாள் 632 , நாள்.03.06.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.04

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN60Z2921 என்ற ட்ராக்டருக்கு செல்ப் மோட்டாரில் ஏற்பட்ட பழுதை பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.3900/–ஐ நகராட்சி ஓட்டுனர் (பொறுப்பு) திரு.சரவணக்குமார் செலவு செய்துள்ளதை தொடர்ந்து செலவினத் தொகையினை திரு.சரவணக்குமாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள் 633 , நாள்.03.06.2019**

**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.05

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் உள்ள 12511 வீட்டு குடியிருப்புகள் 1781க்கு மேற்பட்ட வணிக நிறுவனங்கள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் அன்றாடம் 13 மெட்ரிக் டன் அளவு குப்பை சேகரிக்கப்பட்டு மேற்படி குப்பைகள் வார்டு எண்.27 அய்யனார்புரம் பகுதியில் உள்ள வண்ணான்கரடு பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி குப்பை கொட்டும் இடங்களில் குப்பைகளை மலை போல தேங்கி கிடப்பதால் நகர்ப்பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வாகனங்களில் எடுத்து சென்று குப்பை கிடங்கில் கொட்டுவதில் மிகவும் சிரமம் ஏற்படுவதால், வாகனங்கள் அடிக்கடிப பழுது ஏற்படுவதால் உரிய நேரத்தில் குப்பைகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே பொது மக்களின் நலன் மற்றும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வருடம் முழுவதும் தேவைப்படும் போது குப்பைகளை அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1986/2019/எச்1).**

**தீர்மான எண், நாள்** **634 , நாள்.03.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******